**Gmail**

**Google Ireland Limited ("Google")**
Gordon House, Barrow Street, Dublin 4, Ireland
https://support.google.com/

*டிசம்பர் 21, 2020 முதல் நடைமுறைக்கு வருகிறது*

**ஒப்பந்தச் சுருக்கம்**

- ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் எங்கள் சேவை தொடர்பான சலுகையின் முக்கிய அம்சங்களை இந்த ஒப்பந்தச் சுருக்கம் விவரிக்கிறது[1].
- பல்வேறு சேவை தொடர்பான சலுகைகளுக்கு இடையேயான ஒப்பீட்டைச் செய்ய உங்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.
- எங்கள் சேவை தொடர்பான சலுகையைப் பற்றிய முழுமையான தகவல்கள் பிற ஆவணங்களில் உள்ளன.

**சேவைகள்**
Gmail என்பது ஒரு மின்னஞ்சல் சேவையாகும், இது இணைய இடைமுகம் அல்லது ஆப்ஸ் வழியாக பல சாதனங்களிலும் இயங்குதளங்களிலும் வழங்கப்படுகிறது. Gmail வழியாக மின்னஞ்சல்களைப் அனுப்ப/பெற இணைய இணைப்பு தேவை. Gmail சேவையைப் போதுமான திறனோடும் கவனத்தோடும் Google வழங்குகிறது. இருப்பினும் சேவையின் தரம் குறைவதில்லை.

**கட்டணம்**
Gmail சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. அதன் உபயோகம் Googleளின் சேவை விதிமுறைகளுக்கு (https://policies.google.com/terms தளத்தில் உள்ளது) உட்பட்டதாகும்.

**கால அளவு, புதுப்பித்தல் & நிறுத்துதல்**
பதிவு செய்த உடனேயே Gmailலை நீங்கள் பயன்படுத்தத் தொடங்கலாம். குறிப்பிட்ட கால அளவிற்கு Gmailலைப் பயன்படுத்த வேண்டும் என கட்டாயமில்லை. எப்போது வேண்டுமானாலும் இதைப் பயன்படுத்துவதை நிறுத்திக்கொள்ளலாம்.

**மாற்றுத்திறன் கொண்ட பயனர்களுக்கான அம்சங்கள்**
Gmailலில் ஸ்க்ரீன் ரீடரையும் கீபோர்டு ஷார்ட்கட்களையும் பயன்படுத்தலாம், அதிக ஒளி மாறுபாட்டு தீமினையும் அமைத்துக்கொள்ளலாம். கூடுதல் விவரங்கள் https://www.google.com/accessibility/ தளத்தில் கிடைக்கும்.

**தொடர்புடைய பிற தகவல்கள்**
வாடிக்கையாளர் உதவி மையம்: Gmailலுக்கான உதவி/ஆதரவிற்கு https://support.google.com/ தளத்தைப் பார்க்கவும்.
புகார்கள்: உங்கள் புகார்களை https://ec.europa.eu/consumers/odr/main/?event=main.adr.show2 தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, புகாருக்கான வேறொரு தீர்வு வழங்குநரிடமோ உங்கள் நாட்டின் சட்டப்பூர்வத் தேவைக்கேற்ப வேறு வழங்குநரிடமோ எடுத்துச் செல்லலாம். மேலும் விவரங்களுக்கு Google சேவை விதிமுறைகளைப் பார்க்கவும்.
பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய சம்பவங்கள்: பாதுகாப்பு அல்லது தனியுரிமை மீறல் நிகழ்வுகளைத் தாமதமின்றிக் கண்டறிந்து பதிலளிக்கும் வகையில் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் கூடிய 24/7 பாதுகாப்பு மீறல் நிகழ்வுகள் மேலாண்மைத் திட்டத்தை Google பராமரிக்கிறது. ஆன்லைன் பாதுகாப்பை நிர்வகிப்பதில் உங்களுக்கு உதவ, Google பாதுகாப்புச் சரிபார்ப்புப் பட்டியலையும் Google வழங்குகிறது.
தனிப்பட்ட தரவு: Gmailலில் பதிவு செய்ய, உங்கள் பெயரையும் உங்கள் கணக்கிற்கான பயனர்பெயர் ஒன்றையும் நீங்கள் வழங்க வேண்டும். நீங்கள் Gmailலைப் பயன்படுத்தும்போது Google சேகரிக்கும் தனிப்பட்ட தரவுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு Google தனியுரிமைக் கொள்கையை (https://policies.google.com/privacy தளத்தில் உள்ளது) பார்க்கவும். Google தனியுரிமைக் கொள்கை என்பது, உங்களுக்கும் Googleளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியோ இந்தச் சுருக்கவிவரத்தின் ஒரு பகுதியோ இல்லை.

---

[1]ஆர்டிகிள் 102(3) ஆஃப் டைரக்டிவ் (EU) 2018/1972 ஆஃப் தி யூரோப்பியன் பார்லிமெண்ட் அண்ட் ஆஃப் தி கவுன்சில் ஆஃப் 11 டிசம்பர் 2018 எஸ்டாபிளிஷிங் தி யூரோப்பியன் எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன்ஸ் கோட் (OJ L 321, 17.12.2018, p. 36).